©
தமிழ்நாடு அரசு
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 12] சென்னை, புதன்கிழமை, மார்ச் 23, 2022
பங்குனி 9, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2053

# பகுதி VI—பிரிவு 1 இன் இணைப்பு

## துறைத் தலைவர்களுடைய அறிவிப்புகள்

***1983ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களின் சட்டப்பிரிவு 137(2)(பி)–ன் கீழ் கூட்டுறவு சங்கங்களை கலைத்தல் மற்றும் கலைத்தல் அலுவலர் நியமனம் செய்தல் பற்றிய அறிவிக்கை***

**இசட். 497, நாட்டிருப்பு தியாகராஜசுவாமி குத்தகைதாரர்கள் கூட்டுறவு பண்ணைச் சங்கம்**

*( ந.க.எண். 210/2018/குவிக )*

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளுர் வட்டாரம் இசட்.497, நாட்டிருப்பு தியாகராஜசுவாமி குத்தகைதாரர்கள் கூட்டுறவு பண்ணைச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 சட்டப்பிரிவு 137(2)–பி–ன் கீழ் கலைத்து ஆணையிடப்படுகிறது. மேலும், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு 138–ன் கீழ் கூட்டுறவு சார்பாதிவாளர் (பண்டகசாலை), நாகப்பட்டினம் மேற்படி சங்கத்தின் கலைத்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நாகப்பட்டினம்,
2022 ஜனவரி 3.

**அ. முகமது நாசர்,**
*துணைப் பதிவாளர்.*

**1975ஆம் வருட தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் பிரிவு 44(2)–ன் கீழான அறிவிப்பு.**

*(ந.க. எண். 617/அ2/2021.)*

1975 ஆம் வருட தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் ( தமிழ் நாடு சட்டம் 27/1975 ) பிரிவு 44(2)–ன் கீழ் அளிக்கப்படும் அறிவிப்பானது. பிரிவு 44 (1)–ன் கீழ் சங்கங்கள் செயல்படுகிறதா என கீழ்கண்ட சங்கங்களுக்கு அனுப்பிய இவ்வலுவலகக் கடித எண். 617/அ2/2021 நாள் 27.08.2021–க்கு கீழ்கண்ட சங்கங்களிடமிருந்து எவ்விதப் பதிலும் பெறப்படவில்லை. எனவே இந்த அறிவிப்பு "***தமிழ்நாடு அரசிதழில்***" பிரசுரமாகும் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தக்க விளக்கம் சங்கங்களிடமிருந்து பெறப்படவில்லையாயின், கீழ்கண்ட சங்கங்களின் பெயர்கள் சங்கங்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

| *வ. எண்* | *சங்கங்களின் பதிவு எண் மற்றும் வருடம்* | *சங்கங்களின் பெயர் மற்றும் முகவரி* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | 42/2019 | ட்ரூபா பணியாளர்கள் நலச்சங்கம், சிறுகூடல்பட்டி, வீராமதி அஞ்சல், சிறுகூடல்பட்டி, திருப்பத்தூர், சிவகங்கை–630 212 |

**1975ஆம் வருட தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் பிரிவு 44(4)—ன் கீழான அறிவிப்பு.**

(ந.க. எண். 2283/அ2/2020.)

1975 ஆம் வருட தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27 /1975 ) பிரிவு 44(4)—ன்கீழ் அளிக்கப்படும் அறிவிப்பானது. பிரிவு 44 (2)—ன் கீழ் அனுப்பிவைக்கப்பட்ட அறிவிப்பு எண். 2283/அ2/2020, நாள் 07.10.2021 ***தமிழ்நாடு அரசிதழ்*** வெளியீடு எண். 47 நாள் 24.11.2021—லும் அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டது)—க்கு கீழ்க்கண்ட சங்கங்களிடமிருந்து சங்கம் செயல்படுகிறதா என்பதற்கான விளக்கம் பெறப்படாததால் கீழ்க்கண்ட சங்கத்தின் பெயர் சங்கங்கள் பதிவேட்டிலிருந்து நீக்கம் (Strike Off) செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த அறிவிப்பு ***தமிழ்நாடு அரசிதழில்*** பிரசுரமாகும் நாளிலிருந்து கீழ்கண்ட சங்கம் கலைக்கப்பட்டதாக கருதப்படும்.

| *வ. எண்* | *சங்கங்களின் பதிவு எண் மற்றும் வருடம்* | *சங்கங்களின் பெயர் மற்றும் முகவரி* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | 73/1994 | வீட்டு வசதி வாரிய வீடு உரிமையாளர்கள் நலச்சங்கம் காரைக்குடி பி 36, வீட்டு வசதி வாரிய குடியிருப்பு கழனிவாசல், காரைக்குடி |

காரைக்குடி,
2022 பிப்ரவரி 28.

**தெ. லலிதா,**
*மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.